மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் ஏற்கனவே சொன்னேன், அவர்களுடைய பதவி உயர்வு வாய்ப்பு பாதிக்கப் படவில்லை.

திரு. க. சுப்பு : மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் சிலர் குற்றம் சுமத்தப்பட்ட பிறகும் அக்யூஸ்டு அப்ரூவராக மாறிய பிறகும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படாமல் பல்வேறு உயர்ந்த பதவிகளில் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். அதனால் நிர்வாகம் சீரழிந்து விடுகிறது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படி எங்கும் குறைபாடு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 461......

THIRU K. SUPPU : Point of order arising on the answer of the Hon. Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு கேள்விக்குப் போய் விட்ட பிறகு எதுவும் கேட்க முடியாது, அதோடு விட்டு விடுங்கள்.

இல்மனைட் ஏற்றுமதி

* வினா எண். 461 — திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து இல்மனைட் என்ற தாதுப்பொருள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) இல்மனைட் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத் திலும், மேலும் கேரள மாகாணத்தில் கவரா என்னும் பகுதி யிலும் ''இண்டியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட்'' (Indian Rare Earths Limited) என்னும் மத்திய அரசாங்க நிறுவனத்தால் தோண்டி யெடுக்கப்படுகிறது.

இந்த நிறுவனம் இல்மனைட் எனப்படும் தாதுப்பொருளை திருவாளர்கள் தாரங்கதாரா கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற நிறு வனத்திற்கு விற்றுவிடுகிறது. திருவாளர்கள் தாரங்கதாரா

1979 மார்ச் 19]

கெமிக்கல்ஸ் லிமிடெட் இத்தாதுப்பொருளின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தேவைக்கேற்ப சுத்தப்படுத்தப்பட்ட நிலையில் (Beneficiated Ilmenite) விற்பனை செய்கின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெல்ஜியம் போன்ற நாடுகளுக்கு இந்த தாதுப் பொருள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலமாக இந்த அரசுக்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது? இன்டியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் கம்பெனிக்கு அரசாங்கம் மின்சாரம் வழங்குவதில் ஏதாவது கன்சஷன் வழங்குகிறதா? கேரள மாநிலத்தில் கவரா என்னும் பகுதியிலே உள்ள அந்த தொழிற்சாலையை குமரி மாவட்டத்திலேயுள்ள மணவாளக்குறிச்சிக்கு மாற்றவேண்டுமென்று முயற்சியெடுக்கப்பட்டதே, அது அவ்வாறு மாற்றப்பட்டு மணவாளக்குறிச்சியிலே இப்போது இயங்கி வருகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியில் இன்டியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் என்னும் மத்திய அரசு நிறுவனம் இயங்கி வருகிறது. அது தாதுப் பொருட்களை வெட்டியெடுத்து தாரங்கதாரா கெமிக்கல்ஸ் லிமிடெட்டிற்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் அதை ஏற்றுமதி செய்கிறார்கள். நமக்கு ராயல்டி என்ற அடிப்படையில் வருமானம் வருகிறது.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, வருடமொன்றுக்கு எத்தனை ஆயிரம் டன் ஏற்றுமதி செய்யப்படுகிறது? அப்படி ஏற்றுமதி செய்யப்படுகிற தாதுக்களை குமரி மாவட்டத்தில் உள்ள மணவாளக்குறிச்சி போன்ற பகுதிகளுக்கு அனுப்பி அங்கே டைடானிஸ் குளோரைடு, டைடானிஸ் ஆக்சைடு, டைடானிஸ் மெட்டல் போன்ற பொருட்களை உற்பத்திசெய்வதற்கு மத்திய அரசாங்கத்தை இந்த அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1971–72 ஆம் ஆண்டு 12,270 மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்யப பட்டிருக்கிறது. 1972-73, 1973-74 இல் 21 ஆயிரம் மெட்ரிக் டன்னும், 1974-75 இல் 6,500 மெட்ரிக் டன்னும், 1975-76 இல் 3,000 மெட்ரிக் டன்னும், 1976-77 இல் 12 ஆயிரம் மெட்ரிக் டன்னும், 1977-78 இல் 8 ஆயிரம் மெட்ரிக் டன்னும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இதை வைத்து தொழில் ஆரம்பிக்க முடியுமா என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலே உள்ள புதிய துறைமுகத்தில், ஏற்றுமதி இறக்குமதி இயந்திர மயமாக்கப்பட்டிருக்கிறது. புதிய துறைமுகம், பழைய

துறைமுகம் ஆகியவை இணைக்கப்பட்ட பின்னர், அதன் காரணமாக 2 ஆயிரம் தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலை இழக்கக் கூடிய நிலையை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்களே, அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா? அதைப் போக்குவரத்திற்கு நிவாரணம் அளிக்க, ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறைக்கு இந்தக் கேள்வியைப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியிலே அந்த ஆலையை விஸ்தரித்து பல பொருட்களை உற்பத்தி செய்யும் திட்டம் இருந்ததாகவும், ஆனால் அதற்குப் போதிய மின்சார சக்தி கொடுக்க தமிழ்நாடு அரசு தயாராக இல்லையென்ற காரணத்தால் அந்தத் திட்டம் கேரளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகக் குறிப்பிடுகிறார்கள், அது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, என்னிடத்திலே தற்போது விவரம் இல்லை.

இலுப்பப்பட்டு நீலகண்டேஸ்வரர் கோயில் பணியாளர்கள்.

* வினா எண் 462 ;—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மாயூரம் ஒன்றியம், மணல்மேட்டைச் சேர்ந்த இலுப்பப்பட்டு அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் பணியாற்றி வந்த ஊழியர்கள் பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : திருவாவடுதுறை ஆதீனத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளது இவ்வாலயம். அதில் பணிபுரிந்த ஏழு ஊழியர்கள் 15-3-1977 முதல் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களுள் ஒருவர் 30-6-1977 அன்று இறந்துவிட்டார். மீதமுள்ள ஆறு பேர் 1-7-1977 முதல் வேலைக்கு மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பல முறை இந்த மாமன்றத்திலே இத்தகைய பிரச்சினைகள் வரும்பொழுது குறிப்பாக மடங்கள், ஆதீனங்கள் ஆகியவற்றிற்குச் சொந்தமான